# திருப்பத்தூர் நகராட்சி

2019 – ஆம் ஆண்டு மே மாதம் 31 – ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் — தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் — திருப்பத்தூர் நகராட்சி.
நாள் 31.05.2019

**பொருட்கள்**

**42)** ÂU¥g¤ ö® efuh£Á th®L v©.18 nr®nkd¦ Jiurhäah® rhiy (Miza® FoæU¥ò g¡f¤Ây¦ g[¦ [¦lh¥ mU»y¦) ÁWghy« gGjilªJs¦sJ. vdnt nkw¦go Ïl¤Ây¦ gGjhdghy¤Âid Ú¡» é£L òÂajhf ÁWghy« mik¡fÎ« mjw¦fhd njhuha kÂ¥Õ£L bryéd¤ bjhifahd %.1.20 Ïy£r¤Âw¦F kd¦w¤Âd¦ mDkÂ¡F it¡f¥gL»wJ.

**mY tyf F¿¥ò**

kd¦w« mDkÂ¡fyh«. nkw¦go gâia bghJãÂæèUªJ nkw¦bfhs¦s kd¦w« mDkÂ¡fyh«.

(ந.க.எண்.248/2019/இ1)

**43)** மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதி -2019 திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரணம் பணிகள் மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட அரசாணை Revenue and Disaster Management Department Disaster Management Wing D.M-III (1) SECTION G.O.(M.S) No.125, Dated.28-05-2019 – ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. வறட்சி நிவாரணம் பணிகளை உடனடியாக மேற்கொள்ள குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி பெற எடுத்த நடவடிக்கையை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.938/2019/இ1)

**44)** திருப்பத்தூர் நகராட்சியில் நகராட்சி வளாகத்தின் உட்புறம் அமைக்கப்படும் நுண்ணுயிர் உர சேகரிப்பு மையம் (MCC) த்தில் உற்பத்தி ஆகும் பசுமை உரத்தினை வைத்து மாடி தோட்டம் அமைக்க நகராட்சி வளாகத்தில் நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மேற்தளத்தில் Open Terrace ல் மாடி தோட்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை செய்திட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் என மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்திட டெண்டர் கோர அனுமதி மதிப்பீட்டு தொகையான ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணி தூய்மை இந்தியா திட்டத்தில் செயலாக்கப்படும் உரம் பயன்பாட்டிற்கு அத்தியாவசியம் என்பதால் இப்பணியினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**45)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள அதற்கான தோராய மதிப்பீட்டு செலவினங்களுக்கு திருப்பத்தூர் நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | இனி வரும் மாதங்களான ஜுலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்கள் மழைகாலங்களாக உள்ளதால் மழை வரும் பொழுது அதனால் ஏற்படும் சிறு கால்வாய் அடைப்பு மற்றும் அவசர கால நிவாரண உதவிகள் செய்திட தளவாட சாமான்கள் அவ்வப்பொழுது தேவைப்படுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சியரால் தேர்தலை முன்னிட்டு பணிக்கப்படும் பணிகளை மேற்கொள்ளுதல் | 2.00 |
| 2 | வார்டு எண்.23 அப்துல் மாலிக் தெருவில் உள்ள கானாறு பகுதியின் இருபுறமும் உள்ள தெருக்களில் உள்ள மக்கள் அருகில் உள்ள அடுத்த வார்டு பகுதிக்கு செல்ல இடையில் உள்ள கானாற்றினை அதிக தூரம் கடந்து செல்ல வேண்டி உள்ளது. எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு இதனை இனைக்கும் சிறுபாலம் அமைத்தல் | 2.00 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மாவட்ட ஆட்சியர் அவர்களின் போர்கால மற்றும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் தேர்தலுக்கான ஆரம்பகால பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து விதமான பணிகளும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**46)** திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.15ல் பாலம்மாள் காலனியில் உள்ள R.O. Plant தற்பொழுது பழுதாகி R.O. Plant இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, குடிநீரினை சுத்தம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, R.O. Memorine பழுதுநீக்கி சரி செய்ய வேண்டி உள்ளது. இதனை சீர் செய்ய மதிப்பீடு ரூ.0.85 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி பணி குடிநீர் பணி என்பதால் மக்களின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் ஒப்பந்தபுள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.0.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். தண்ணீர் தேவையை முன்னிட்டும் முன்னுதாரணமாக வார்டு எண்.15-ல் R.O. Plant SSS முறையில் அமைத்து நகராட்சியின் மூலம் பராமரிப்பு பணி பணியாளர்களை நியமித்து நடைபெற்று வருவது வழக்கமாகி உள்ளதால் இப்பணியின் அவசியம் கருதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எ.நல்லதம்பி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உடன் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**47)** திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் 86.40 கி.மீ பகிர்மான பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் பைப் லைன் 7.50 கி.மீ உள்ளது. தற்பொழுது திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணி நடைபெற்று வருவதால் அடிக்கடி நகராட்சி பைப் லைன் உடைப்பு ஏற்பட்டு மக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் வறட்சி நிவாரண நிதியாக வழங்கப்படும் பணிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது இதனை தவிர்க்கும் பொருட்டு பைப் லைன் உடைப்பு, அடைப்பு, கசிவு மற்றும் அனைத்து விதமான தண்ணீர் வழங்கும் பம்ப் குழாய் மோட்டார் பராமரிப்பு பணி ஆகியவற்றினை உடனுக்குடன் சரி செய்து மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க வழிவகை செய்திட பைப் லைன் பராமரிப்பு பணி செய்திட 2019-2020ம் ஆண்டுக்கான பணியாக அனைத்து முன்னால் வார்டு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாவட்ட ஆட்சியரின் கூட்டத்தில் பராமரிப்பு பணிகளுக்கென நிதி ஒதுக்கி ஆவண செய்ய கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் மேற்படி பணி குடிநீர் பணி என்பதால் மக்களின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் ஒப்பந்தபுள்ளி கோரி பணியினை வழங்க வார்டு எண்.1 முதல் 18 வார்டு பகுதிக்கு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்.

**48)** திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் 86.40 கி.மீ பகிர்மான பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் பைப் லைன் 7.50 கி.மீ உள்ளது. தற்பொழுது திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணி நடைபெற்று வருவதால் அடிக்கடி நகராட்சி பைப் லைன் உடைப்பு ஏற்பட்டு மக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் வறட்சி நிவாரண நிதியாக வழங்கப்படும் பணிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது இதனை தவிர்க்கும் பொருட்டு பைப் லைன் உடைப்பு, அடைப்பு, கசிவு மற்றும் அனைத்து விதமான தண்ணீர் வழங்கும் பம்ப் குழாய் மோட்டார் பராமரிப்பு பணி ஆகியவற்றினை உடனுக்குடன் சரி செய்து மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க வழிவகை செய்திட பைப் லைன் பராமரிப்பு பணி செய்திட 2019-2020ம் ஆண்டுக்கான பணியாக அனைத்து முன்னால் வார்டு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாவட்ட ஆட்சியரின் கூட்டத்தில் பராமரிப்பு பணிகளுக்கென நிதி ஒதுக்கி ஆவண செய்ய கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் மேற்படி பணி குடிநீர் பணி என்பதால் மக்களின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் ஒப்பந்தபுள்ளி கோரி பணியினை வழங்க வார்டு எண்.19 முதல் 36 வார்டு பகுதிக்கு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்.

**49)** திருப்பத்தூர் நகராட்சி அலுவலகம் உட்புறம் உள்ள நகராட்சி பணியாளர்கள் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனை பராமரிப்பு பணி செய்து புதியதாக மராமத்து பணி செய்ய வேண்டி உள்ளது. மேலும் இதற்கென தனியாக ஒரு தரைமட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் மின்மோட்டார் பொருத்த வேண்டி உள்ளது. நகராட்சி ஆணையர் அறையில் பழுது ஏற்பட்டு ஏசி தங்காமல் வெளியே செல்லும் நிலை உள்ளது. மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அறையின் மேற்கூரை இடிந்துவிழும் நிலையில் உள்ளதால் இவற்றினை சீர் செய்திட தோராய மதிப்பீட்டு தொகையாக ரூ.4.00 இலட்சம் செலவிட்டு இப்பணியினை செய்திட ஒப்பந்தபுள்ளி கோரிடவும், மதிப்பீட்டு தொகையான ரூ.4.00 இலட்சத்திற்கும் பணிஉத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். கட்டிடப்பணிகளை விரைந்து செய்து கட்டிடங்களை செப்பனிட்டு வைத்துக்கொள்ள மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலுக்கிணங்க கழிவறை பயன்பாடு அலுவலகத்தில் சிதிலமடைந்த காரணத்தினால் அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**50)** திருப்பத்தூர் நகராட்சி 36 வார்டுகளில் உள்ள கழிவுநீர் வெளியேறும் பகுதியில் மழைகாலங்களில் மழைநீர் அதிகரித்து கழிவுநீருடன் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு கழிவுநீர் உட்புகுந்து விடுகிறது. மேலும் திருப்பத்தூர் நகராட்சி குப்பை கிடங்கில் அவ்வப்பொழுது குப்பைகள் நிறைந்து குப்பை கொட்ட இயலாத நிலை ஏற்படுகிறது. இதனை எல்லாம் சரி செய்திட JCB மற்றும் Hitach இயந்திரங்கள் மற்றும் டிராக்டர் கொண்டு மழைநீர் மண்ணை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் என மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோர, மதிப்பீடு தொகையான ரூ.2.00 இலட்சத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். பொதுநிதியிலிருந்து தூய்மையாக நகரை வைத்திருக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**51)** திருப்பத்தூர் நகராட்சியில் திறந்தவெளி கழிப்பிடத்தினை அறவே ஒழிக்கும் திட்டத்தின் படி வீட்டிற்கு வீடு தனி நபர் கழிப்பிடம் கட்டும் பணி செய்து முடிக்கப்பட்டு அனைத்து கழிப்பிடம் கட்டுப்பட்டு அனைவரும் கழிப்பிடம் கட்டப்பட்டதின் அடிப்படையில் இந்த பகுதியில் உள்ள பயன்பாட்டில் இல்லாத சமுதாய கழிப்பிடத்தினை இடித்து அந்த பகுதியினை மாற்று பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் படிப்பகம் கட்டிடம் கட்டும் பணியினை செய்த்திட (i) இரட்டைமலை சீனிவாசன் தெரு, (ii) கௌதம் பேட்டை மற்றும் (iii) அப்பாய் தெருவில் உள்ள பயன்பாட்டில் இல்லாத சமுதாய கழிப்பிடத்தினை இடித்து படிப்பகம் கட்டிடம் கட்டும் பணியினை செய்த்திட மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்த்திட டெண்டர் கோரிட மன்ற அனுமதி வைத்து பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகையான ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக நகர மன்ற தனி அலுவலர் மற்றம் ஆணையர் அவர்களின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

## <u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.248/2019/இ1)